# 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 70/2022** நாள்: **24.09.2025** எ.ம.சா.**2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அபிபுல்லா | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர், அமராவதி காவல் நிலையம் |
| த/பெ | : | முஸ்தபா | கிராமம் | : | உடுமலைபேட்டை |
| வயது | : | 55 | தாலுகா | : | உடுமலைபேட்டை |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. குற்ற எண்.267/2018 என்ற வழக்கின் முதல் தகவல் அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன். மேற்படி புகாரின் அடிப்படையில் இரண்டு வாகனங்கள் விபத்துக்குள்ளானது என்று நான் பதிவு செய்துள்ளேன். நான் மேற்படி முதல் தகவல் அறிக்கையில் TN 78 W 7956 என்ற TVS Star City வாகனத்தை தவிர வேறு வாகனத்தை நான் குறிப்பிடவில்லை. நான் மேற்படி முதல் தகவல் அறிக்கையை இதச பிரிவு 279, 304A (Hit and Run) என்று பதிவு செய்துள்ளேன். Hit and Run என்று குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கையில் நான் சொல்லவில்லை. வழக்கு சம்பவம் 30.11.2018 இரவு 9 மணிக்கு நடந்தது. முதல் தகவல் அறிக்கையில் 7வது காலத்தில் அடையாளம் தெரியாத வாகனத்தின் ஓட்டுநர் என்று குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கின் புகார்தாரர் இறந்துபோன

ரத்தினசாமியின் மனைவி மஞ்சுளாதேவி ஆவார். புகாரில் சம்பவத்தை நேரில் யாரும் பார்த்ததாக சொல்லவில்லை. நான் சம்பவ இடத்தை நேரில் பார்க்கவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் சாலை 10 அடி அகலத்தில் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள நபருக்கு காயம் எதுவும் இல்லை. இறுதியறிக்கையில் விபத்திற்கு காரணம் TN 41 W 4882 என்று குறிப்பிட்டுள்ளோம். மேற்படி வாகனத்தின் உறுதிபாகத்தை சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றவில்லை. மேற்படி வாகன ஆய்வில் இடது பக்க இண்டிகேட்டர் மற்றும் சேரிகாடு சேதமடைந்திருப்பதாக மோட்டார் வாகன ஆய்வாளர் சொல்லியுள்ளார். விபத்து சமயத்தில் விபத்துக்கு காரணமான நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்தில் இறந்து போனவருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. இறந்துபோன ரத்தினசாமி ஓட்டி சென்ற வாகனத்திற்கு விபத்து சமயத்தில் முகப்பு விளக்கு இருந்ததா என்று எனக்கு தெரியாது. புகார்தாரர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. முதலில் முதல் தகவல் அறிக்கை இதச பிரிவு 279, 304 ஏ Hit and Run என்று பதிவு செய்யப்பட்டு பின்னிட்டு இதச பிரிவு 279, 304 ஏ ஆக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி குற்ற வழக்கு தற்போதும் விசாரணையில் நிலுவையில் உள்ளது. சம்பவ இடத்தில் கிடந்த டைரியை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியாது. சுப்பிரமணியன் ஓட்டி வந்த வாகனம் விபத்திற்கு காரணமல்ல, இறந்துபோனவர் தான் விபத்திற்கு காரணம் என்று சொன்னால் தவறு.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

விபத்திற்கு காரணமான சுப்பிரமணியன் வாகனத்திலும் புட்ரெஸ்ட் சேதமடைந்துள்ளதாக மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எங்கள் விசாரணையில் விபத்திற்கு சுப்பிரமணியன் தான் காரணம் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர்

**அறிக்கையில் இரு வாகனங்களுக்கும் சேதம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.